2007 ஏப்ரல் 5] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

இருக்கிறது. ஆகவே, இதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து, எதிர்காலத்திலே சிறந்த அளவிற்குத் தரம் உயர்த்தக்கூடிய பணிகளை நிச்சயம் இந்த அரசாங்கம் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

1. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஈ) நீலகிரி மாவட்டம், விவசாயிகளுக்குப் பட்டா வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.*

திரு. சி. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கலைஞர் அவர்களுடைய அரசு, சமீபத்திலே பிறப்பித்த உத்தரவின்மூலம், தமிழகம் முழுவதும் இருக்கிற சாதாரண ஏழையெளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. நகர்ப்புறங்களில் அதற்கிருந்த சில தடைகள்கூட, தற்காலிகமாக நீக்கப்பட்டு, வீட்டுமனைப் பட்டாவும், அதேபோல, ஏழைகளுக்கு நிலம் வழங்குகிற இந்தச் சூழலில், நீலகிரி மாவட்டத்திலே, 1989 ஆம் ஆண்டும், அதேபோல, 1992 ஆம் ஆண்டும் இரண்டு சட்டங்கள் போடப்பட்டு, அந்த மலைப் பகுதியிலே, நீலகிரி மலையிலே வாழ்கிற மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாவோ, விவசாயிகளுக்கு நிலப் பட்டாவோ வழங்குவதற்கு இரண்டு தடைச் சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. ஆகவே, தமிழகம் முழுவதும் விவசாயிகள் பட்டா பெறுகிறபோது, அங்கே ஒரு சென்ட் நிலத்திற்குக்கூட பட்டா வாங்க முடியாத நிலையில் அந்த விவசாயிகளும், மக்களும் இருக்கிறார்கள். இதுகுறித்து நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நேரில் எடுத்துச் சொல்லி, மனு அளித்தேன். உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்து, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களும் நடவடிக்கை எடுத்து வருவதாக அறிகிறேன். ஆகவே, அதன்மீது அரசு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கை என்ன என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுப்பெற விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

[2007 ஏப்ரல் 5

*மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள், நீலகிரி மாவட்டத்திலே அரசு புறம்போக்கு நிலங்களிலே, வீடு கட்டி, பத்தாண்டுகளுக்கு மேலே குடியிருந்து வருகின்றவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கடந்த வாரம் கோரிக்கை வைத்தார்கள். அதேபோன்று, நீலகிரி மாவட்டத்தினுடைய அமைச்சரான, கதர்த் துறை அமைச்சரான மாண்புமிகு திரு. இராமச்சந்திரன் அவர்களும் முதல்வர் அவர்களைச் சந்தித்து, இதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், துறையை அறிவுறுத்திய காரணத்தால், இந்தத் துறை முடிவெடுத்திருக்கின்றது. நீலகிரி மாவட்டத்திலே அரசு புறம்போக்கு நிலங்களிலே, பத்தாண்டுகளுக்கு மேல் குடியிருந்து வருகின்றவர்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவிப்பதோடு, அதற்கான ஆணையையும் இந்த அரசு வழங்கிவிட்டது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 9-45)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2007-2008* ஆம் ஆண்டிற்கான (குறுக்கீடு) திரு. ஆர். சாமி, நீங்கள், உங்கள் உறுப்பினர் பேசும்பொழுது இந்தக் கருத்தைச் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் தயாராக இருக்கிறாரா? இல்லை, அமைச்சர் பதில் சொல்வதற்குத் தயாராக இருந்தால்தான் எடுக்கமுடியும்.

4. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

(ஆ) கோரிக்கை எண் 11—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(இ) கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)